ISSN:2582-9599



# புறநானூற்றில் இளமை நிலையாமை

**பேரா.ஜெ.தமிழுல் அன்சாரி,**

**தமிழாய்வுத்துறை,**

**புதுக்கல்லூரி,சென்னை – 600014.**

**ஆய்வுச்சுருக்கம்**

இலக்கியங்கள் காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக விளங்குகின்றன. நம் முன்னோர்கள் நமக்களித்தப் பெருங்கொடை அவ் இலக்கியங்கள். வாழ்க்கைக்குத் தேவையானப் பல கருத்துகள் இவற்றில் காணக்கிடைக்கின்றன. அவ்வகையில் இம்மைக்கும் மறுமைக்கும் பேரின்பம் தரக் கூடிய நிலையாமை உணர்வு புறநானூற்றுப் பாடல்களில் அதிகம் இடம்பெற்றுள்ளது. அவற்றை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

உலகில் பிறந்த ஒவ்வொரு உயிரும், ஒவ்வொரு நிலையையும் கடந்தே அடுத்த நிலைக்குச் செல்கிறது. அவ்வகையில் குழந்தைப் பருவம் தொடங்கி, முதுமைப்பருவம் அடைகிறோம். இடையில் மனதிற்குப் பிடித்தமான இளமைப் பருவத்தை ஒவ்வொரு காலக் கட்டத்திலும், ஒவ்வொரு நாளாக இழந்துவிடுகிறோம். பின்பு முதுமைப் பருவத்தில் ஒரு நாள் அதைப் பற்றிச் சிந்தித்துப் புலம்புகிறோம். இவையெல்லாம் இறைவனின் படைப்பியல் கட்டமைப்பில் அனைவருக்கும் நிகழக்கூடிய நியதியான ஒன்று என்றாலும், இளமையின் இழப்பை அவ்வளவு எளிதாக மனம் தாங்குவதில்லை. 60 வயதை அடைந்த முதியவன் மீண்டும் 20 வயது இளைஞனாக ஆகிவிட முடியாது. இதுவே இளமை நிலையாமை என்று அறிய முடிகிறது. இளமை நிலையற்றுப் போவதுடன், இளமை இன்பம், உறவு போன்றனவும் நம்மை விட்டு நிலையாக இல்லாமல் சென்றுவிடுகிறது. இது குறித்துப் புறநானூறு கூறும் செய்திகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**இளமை நிலையாமை**

நம் வாழ்வில் அழியக்கூடிய ஒவ்வொன்றும் நிலையாமையே ஆகும். அவ்வகையில் பார்க்கும்போது இளமைக்காலம் நம்மிடையே நிலையாக இருப்பதில்லை. இளமைக் காலம் எவ்வாறு நம்மை விட்டு விரைவாகச் செல்கிறது என்பதை,

"வைகல் தோறும் இன்பமும் இளமையும்
எய் கணை நிழலின் கழியும், இவ் உலகத்து" (நற் – 46)

என்கிறது. ஆகையால் இளமையை நாம் எவ்வளவு விரைவாக இழந்து கொண்டிருக்கின்றோம் என்பதற்கு மேற்கண்ட பாடல் சான்றாகிறது.

இழந்த இளமையை மீண்டும் அடைய முடியாது என்பதை,

"முதிர்ந்தோர் இளமை அழிந்தும் எய்தார்
வாழ்நாள் வகை அளவு அறிஞரும் இல்லை" (நற் – 314)

என்று குறிப்பிட்டுள்ளது.

**இளமைக் கால மகிழ்வு**

இளமை இருக்கும்போது இளமையின் மகத்துவம் நமக்குத் தெரிவதில்லை, அதை இழந்தபோதுதான் அதன் மகத்துவம் எவ்வளவு சிறந்தது என்று நம்மால் உணர முடிகிறது. இதை தெளிவுறுத்தும் வகையில், தொடித்தலை விழுத்தண்டினார் என்னும் புலவர், முதுமை அடைந்த காலத்தில், கழிந்த இளமைக் குறித்து கூறுகையில், மறையும், மாயமும் அறியாத இளையாரோடு கூடி நீரில் பாவை வைத்து விளையாடியதும், நெடுநீர்க் குட்டங்களில் குதித்து மணல் கட்டி மகிழ்ந்ததும் கூறி, இத்தகைய இளமை இப்போது எங்கோ சென்று ஒழிந்துவிட்டது. இப்போது அதை இழக்கவே, மேனியில் நடுக்கமும், இருமல் கலந்த சொல்லும், தண்டூன்றி நடக்க வேண்டிய தளர்ச்சியுடைய முதியராகவும் ஆகிவிட்டோம். இப்போது இளமையை நினைத்தால் நெஞ்சில் இரக்க முண்டாகிறது என்கிறார். இதை,

"இனிநினைந் திரக்கமா கின்று திணி மணற்

……………………………………………………………………………………………
………………… நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்துமணற் கொண்ட கல்லா விளமை
அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சிலசொற்
பெரூமூதாளரே மாகிய வெமக்கே." (புறம். 243)

என்ற பாடல் வழி உணரமுடிகிறது.

ISSN:2582-9599

**இன்பம் நிலையாமை**

இளமை நிலையாமையுடன், இளமை அழகின் மூலம் கிடைக்கும் இன்ப வாழ்வும் நிலையற்றதென்பதை இலக்கியங்கள் பறைசாற்றியுள்ளன.

சிறப்பாக வாழ்ந்த தலைமகன் ஒருவன். தவம் மேற்கொண்டு காட்டில் உறைகின்றான். அவன் இல்வாழ்க்கையில் இருந்த காலத்தில், அவனைப்பாடிச் சிறப்பித்த மாரிப்பித்தியார் தற்போது துறவு நிலையில் சடைமுடித்துத் தவம் புரியும் அவனது தாபத நிலையை வியந்து நோக்கினார். அவன் முடியிலுள்ள சடை முதுகிடத்தே கிடந்து புலர்வதைக் கண்டார். அவருக்கு அவனது இளமைக் கால அழகிய இனிய தோற்றம் நினைவுக்கு வந்தது. அக்காலத்தே அவனைக் கண்ட மகளிர் அவன்பால் கொண்ட காதல், காமத்தால் தொடி நெகிழ்ந்து உடம்பு நனி சுருங்கி உயங்கியதும் நினைவிற்கு வந்தது. இதை,

”ஓவத் தன்ன விடனுடை வரைப்பிற்” (புறம் - 251)

என்ற பாடல் வழி எடுத்துரைத்துள்ளார். இளமையழகு நிரம்ப பார்ப்பவர்கள் மனதைக் கொள்ளைக் கொள்ளும் பேரழகு நம்மிடையே இருந்தாலும் அவையெல்லாம் ஒரு நாள் அழிந்துவிடும் என்பதை மேற்கண்ட பாடல் சுட்டியுள்ளது.

இல்வாழ்க்கையில் கணவன், மனைவி என்ற இரு பாத்திரங்கள் இணைந்து குடும்பம் என்ற ஒரு நிலையை அடைகின்றனர். இவ் இல்வாழ்க்கையில் இருவரும் பேரின்பம் காணுகின்றனர். அதே வேளையில் அவ்வின்பம் நிலைபேறாக தங்குவதில்லை இடையிடையே பிரிவுகள், துன்பங்கள், குழப்பங்கள், தோன்றி வாழ்வை நிலை குழைக்கின்றன. அவ்வகையில்,

”கறங்கு வெள் அருவி ஏற்றலின் நிறம் பெயர்ந்து
தில்லை அன்ன புல்லென் சடையோடு
அள்இலைத் தாளி கொய்யு மோனே
இல்வழங்கு மடமயில் பிணிக்கும்
சொல்வலை வேட்டுவன் ஆயினன் முன்னே”

(புறம். 252)

என்ற பாடலில் தமிழ்த்தாபதன் என்ற தலைமகன் ஒருவன் மனைவாழ்வில் தன் மனைவி மீது மிகுந்த காதலை உடையவனாக இருந்து வந்தான். அச்சமயம் ஓதுவது குறித்தும், பொருள் குறித்தும், பகை தணிக்கும் வினை குறித்தும், போர் மேற்கொண்ட வேந்தரிடையே சந்து செய்தற்கும் இவன் தன் மனைவியை பிரிந்ததுண்டு. இவன் மனையாள் இவனது பிரிவைச் சிறிதும் ஆற்றாத சிறந்த காதலை உடையவள்.

பிரியும்போது அவள் மனது அப்பிரிவைத் தாங்கிக் கொள்ளும் அளவில் சொற்களைச் சொல்லி தன் பிரிவை ஆற்றியிருக்குமாறு பண்ணினான்.

அவளுக்கு அவன்பால் ஊடல் உண்டாகும் நேரத்தில் கூட அவ்வூடலில் தேனும், பாலும் போன்ற செஞ்சொற்களைப் பேசி ஊடலைத் தணிப்பவன்.

அப்படி இன்ப வாழ்வு வாழ்ந்த தலைமகன் காட்டில் தவ வாழ்வு வாழ்கின்றான். சடைமுடி பொலிவிழந்து காணப்படுகிறது. அவன் அனுபவித்த இன்ப வாழ்வு தற்போது அவனுக்கு இல்லாமல் போகும் நிலையை மேற்கண்ட பாடல் தெளிவுறுத்துகிறது.

**உறவு நிலையாமை**

இவ் உலகில் உறவுகள் இறுதி வரை நம்முடன் இருப்பதில்லை. இறப்பு, பிரிவு, விவாகரத்து, கருத்து வேற்றுமை போன்ற பல காரணங்களால் வாழ்க்கையில் உறவுகளைப் பிரிந்து, உறவில் ஒரு நிலையற்றத் தன்மையைக் காண்கின்றோம்.

சேரமான் மாக்கோதை மனைவி பெருங்கோப்பெண்டு இளமைப் பருவத்திலேயே இறந்தாள். மனைவியின் இறப்பு அவர்களின் உறவைத் துண்டிக்கிறது. தன் மனைவி தன் கண் முன்னே ஈம நெருப்பில் எரிகிறாள். அவள் பிரிந்தால் தானும் உயிர் பிரிவதாக வாழும் காலத்தில் சொன்ன காதல் சொற்கள் அவன் நினைவில் தோன்றியது. அதைப் பொறுக்க முடியாத கணவன் இறப்பிலாவது ஒன்றிணையலாம் என்று உடன்கட்டை ஏறத் துணிகின்றான். அப்போது மக்கள் அவனைத் தடுத்து,

”வேந்தே காதலிபாள் கொண்ட காதலினும்
நாடு காவலை மேற்கொள்வதால்
உளதாகும் கடமை பெரிதாகும்” (புறம். ப.97) ஔவை.துரைசாமி)

என்று கூறுகின்றனர். இருப்பினும் தன் காதலி தன் கண் முன்னே எரிவதைக் கண்டு தாளாதவனாய்,

”யாங்குப்பெரி தாயினு நோயளவு எனைத்தே
…………………………………………………………………………………
…………………………………… இன்னும் வாழ்வ
லென்னிதன் பண்பே” (புறம். 245)

என்று பாடுகின்றான்.

இதே போன்று,

"பல் சான்றீரே! பல் சான்றீரே!" (புறம் – 246)

என்னும் பாடலில், கணவன் இறக்க மனைவி இரங்கியதும், உடன்கட்டை ஏறத் துணிந்த செய்தியும் இடம்பெற்றுள்ளது.

பூதப்பாண்டியன் இறந்து விடுகின்றான். அவன் மனைவியும் தீப்பாய முற்படுகிறாள், மக்கள் அவளைத் தடுக்கின்றனர். அவர்களை நோக்கி "நின் கணவனுடன் நீயும் செல்வாயாக என்று சொல்லாது என்னைத் தடுக்கும் பொல்லாத செயல் புரிகின்றீர்களே! வெள்ளரி விதை போன்ற நெய்யற்ற நீர்ச்சோறு, எள்ளுத்துவை, புளிகூட்டிச் சமைத்த வேளை இலை ஆகியவற்றை உண்டும், பாயின்றி பருக்கைக் கற்கள் மேல் படுத்தும், கைம்மை நோற்கும் பெண்டிர் போன்றோர் அல்லோம் யாம்! ஈமப் படுக்கை உங்களுக்கு அரிதாகத் தோன்றலாம். எம் கொழுநன் இறந்துபட்டனன். ஆதலால், எமக்கு அத் தீயே தாமரைக்குளத்து நீராகும் என்று அறிவீர்களாக!" (புறம், புலியூர் கேசிகன், ப.254) என்று கூறுகின்றாள். இதன் வழி அவள் வாழ்ந்த காலத்தில் பெற்ற இன்பமும், அவள் கணவன் மீது கொண்ட காதலும் புலப்படுகிறது. இருப்பினும் அவள் அத்தனையையும் இழந்து நிற்கின்றாள். இதுவே நிலையாமை என்னும் பொருள்படுகிறது.

இளமை நிலையற்றது. இளமை இருக்கும் காலத்திலேயே செய்யவேண்டிய அறச் செயல்களையும், அடைய வேண்டிய இன்பங்களையும் அடைந்து கொள்ள வேண்டும். இளமை இழந்து முதுமைப்பருவம் எய்தினாலும், இழந்த இளமையை நினைத்து மனம் வருந்தாமல். இருக்கும் முதுமைக் காலத்தில் செய்யாது தவிர்த்த அறங்களைச் செய்து பேரின்பப் பெரு வாழ்வை அடைய முயலுதல் வேண்டும்.

"நாளது செலவும் மூப்பினது வரவும்
அரிது பெறு சிறப்பின் காமத்து இயற்கையும்
இந்நிலை அறியாய் ஆயினும்" (அகம் – 353)

என்ற நிலையாமை உண்மையை ஒவ்வொருவரும் அறிவது இன்றியமையாததாகிறது.

மக்கள் அனைவரும் நிலையாமையை உணர்ந்துவிட்டால் செல்வம், யாக்கை இவை மட்டுமின்றி இளமை நிலையாமையாமையையும் எளிமையானக் கண்கொண்டு பார்க்கத் தொடங்கி விடுவர். அவர்களுக்கு இழப்பு ஒரு அதிர்ச்சியைத் தராது. இன்பமும் துன்பமும் ஒன்றாகக் கொள்வர். பொருள் மீதானப் பற்று ஒழிந்து விடும். அதன்காரணமாக நிறைய தான தர்மங்களை செய்து, தானும் நன்றாக வாழ்வர். பிறரும் நன்றாக வாழ காரணமாக ஆகிவிடுவர். உறவின் மீதான இழப்பிலும் மன வலிமைப் பெறுவர், விதி மீதான நம்பிக்கையும் அவர்களுக்கு வந்துவிடும். இதன் காரணமாக

இம்மையிலும் மறுமையிலும் நற்பேறு பெறுவர். அதற்கு இப் புறநானூற்றுப் பாடல்கள் பெரிதும் துணை நிற்பது ஆய்வு முடிவாகக் கொள்ளப்படுகின்றன.

துணை நூல்கள்

1. புறநானூறு, ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், முதல் பதிப்பு: 1951
2. நற்றிணை, டாக்டர் நா. ராமையா பிள்ளை, வர்த்தமானன் பதிப்பகம்,